விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி
விற்பனையாளர்]
566, கேணல் ஒட்டு சாலை,
(ஆஸ்பத்திரி வீதி),
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மூக்குக் கண்ணாடி
அழகிய பிறேம்
சிறந்த முறையில்
தெரிவு செய்து
அதே நாளில்
பெற்றுக்கொள்ள
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி
விற்பனையாளர்]
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 17 புதன்கிழமை (31 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 185

# கிழக்குப் போர் முனையில் படைகளை முடக்கி வடக்கு முகாம்களை அழிக்க புலிகள் திட்டம்!

## இராணுவ உயர்பீடம் கிலேசம்

கொழும்பு, மே 31

அரசின் துருப்புக்களில் பெரும் பகுதியை கிழக்குப் போர் முனையில் முடக்கச் செய்வதற்காகவே கிழக்குப் பிரதேசத்தில் அடுத்தடுத்து — இடைவிடாது — தொடர்ந்து தாக்குதல்களைப் புலிகள் நடத்தி வருகின்றார்கள்.

பெரும்பகுதி அரச துருப்புகள் கிழக்கில் ஈடுபடுத்தப்பட, தனித்து விடப்படும் வடபகுதி முகாம்களை — சந்தர்ப்பத்தை பயன்படுத்தி — நிர்மூலமாக்குவதே புலிகளின் திட்டமாகும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களில் கிலேசம் தெரிவிக்கப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் கூறுகின்றன.

கடந்த 17 வருட இனப் போரில், என்றுமில்லாதவாறு கிழக்கில் தமது தாக்குதல்களை கடந்த ஆறு வாரங்களாக விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொடர் தாக்குதல்கள் கிழக்கில் புலிகளின் பலத்தை வெளிப்படுத்தும் அதே வேளை, அவை ஸ்ரீலங்கா அரச வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தவும் தவறவில்லை.

புதிதாக ஆட்களைப் படைக்குத் திரட்டும் முயற்சியில் ஸ்ரீலங்கா அரசு மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும் — அதிகரித்து வரும் துருப்புகளின் எண்ணிக்கை கிழக்குப் போர் முனையில் அதிகரித்து வரும் புலிகளின் அச்சுறுத்தலுக்கு ஈடுகொடுப்பதற்குப் போதுமானதல்ல — என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் கிழக்கு நிலைமையைச் சமாளிப்பதற்காக தென்னிலங்கையிலும், வடக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



உவர்... களத்துக்கு வந்தால், கெதியிலை மரணத்துக்கு பின் கொடுக்கிற பதவி உயர்வும் கிடைச்சிடும் பாருங்கோ...!

சப்புகஸ்கந்தவில் உள்ள

## பெற்றோல் நிலையத்திலும் விமான எதிர்ப்பு ஆயுதம்!

கொழும்பு, மே 31

சப்புகஸ்கந்தவில் உள்ள பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தில் விமான எதிர்ப்பு ஆயுதம் பொருத்தப்பட்டுள்ளது என அறியவருகிறது.

விடுதலைப் புலிகள் பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தை விமான மூலம் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்பட்டன என்று தெரிய வருகிறது. (ஒ-3)

## பூநகரியில் புலிகள் தாக்கு; சிப்பாய் பலி; 3 பேர் காயம்

கொழும்பு, மே 31

பூநகரிப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

— இவ்வாறு கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று மாலை தகவல் வெளியிட்டன. [ஒ-4]

## கோட்டை ரயில் நிலையம் முன் இனவாத பதாகைகள்!

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இனவாத உணர்வுகளைத் தூண்டும் வகையில் பதாகைகளும் சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.

இதேவேளை, கொலையுண்ட திம்புலாகல சீலாலங்கார தேரருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கொழும்பில் மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன என்றும் —

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனவாதிகள் வன்முறையைத் தூண்ட முயற்சிக்கின்றனர் என்றும் — பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் திடீர் சோதனை

## மேயரின் அலுவலகத்திலும் இராணுவத்தினர் தேடுதல்

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் திணைக்களங்களில் இராணுவத்தினர் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் அலுவலகத்தை கூட இராணுவத்தினர் சோதனையின் போது விட்டு வைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர, மட்டக்களப்பின் கச்சேரி மற்றும் வேறு அரச திணைக்களங்களிலும் பலத்த தேடுதல் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

## வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு மேலும் 10 பொருள்களுக்குத் தடை

வடக்கே எடுத்து வருவதற்கு மேலும் 10 பொருள்களுக்கு அரசு தடை விதித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியா இணைப்பதிகாரியின் சிபார்சின் படி இந்த 10 பொருள்களுக்கும் இம்மாத நடுப்பகுதியில் இருந்து அரசு தடைவிதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பொருள்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியாகாத போதும் படையினர் வவுனியாவில் இப் பொருள்கள் மீதான தடையை அமுல் செய்து வருகின்றனர்.

அந்தப் பொருள்களின் விபரம் வருமாறு!

★ வெற்று சாக்குகள் வெற்று பொலித்தீன் பைகள்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்.
★ வாகனம் சுத்திகரிக்கும் பொருள்கள் மற்றும் ஓயில் போன்றவை.
★ இரசாயனப் பொருள்கள்.
★ மிதக்கப் பயன்படும் உடுப்புக்கள்' வன்னம் ஒட்டும் பசை வகைகள்.
★ விறகு.
★ ஜெனரேற்றர்கள்.
★ சகல விதமான பற்றறிகள்.
★ மின்சார வயர்கள்.
★ அலுமினியப் பொருள்கள்.

ஏற்கனவே 21 பொருள்களை வடக்கே எடுத்து வருவதற்கு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஒ-3)

## அரசியல் தீர்வே சாத்தியமானது; அதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள்!

ஸ்ரீலங்கா அரசிடம் அமெரிக்கா வற்புறுத்து

கொழும்பு, மே 31

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு மட்டுமே சாத்தியமானது எனவே அதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா அரசை அமெரிக்கா வற்புறுத்திக் கேட்டிருப்பதாக அறிய வருகின்றது.

அண்மையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பாரன் கிறிஸ்தோபரை அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜயந்த தனபால சந்தித்துப் பேசிய போதே அமெரிக்க அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் பாரன் கிறிஸ்தோபர் விளக்கியதாக அறியவருகின்றது.

ஸ்ரீலங்காவின் பிந்திய நிலைமை குறித்தும் —

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை அரசு கைவிட்டதற்கான காரணத்தையும் — அமெரிக்காவுக்கான ஸ்ரீலங்கா தூதுவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சரிடம் இச் சந்திப்பின்போது விளக்கினார் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பிரச்சினை குறித்து அமைச்சர் கிறிஸ்தோபர் அனுதாபம் காட்டினார் என்றாலும் —

பேச்சுவார்த்தை முயற்சி

[6 ஆம் பக்கம் பார்க்க]

நாளை பருத்தித்துறைக்கு வரவிருக்கும்

## நரோமாவில் செல்ல பணம் செலுத்திய 30 பேரின் பயண அனுமதி ரத்து

யாழ்ப்பாணம், மே 31

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வரும் 'நரோமா' கப்பலில் பயணம் மேற்கொள்ளவென யாழ். செயலகத்தில் பணம் செலுத்தி பதிவு செய்து கொண்ட முப்பதுக்கும் மேற்பட்ட பயணிகளுக்கான பிரயாண அனுமதியை கூட்டுப்படைத் தலைமையகம் வழங்கமறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்த வயதை உடையோர், கொழும்பில் தங்குவதற்கான சரியான முகவரியை குறிப்பிடாதோர், மற்றும் தேசிய அடையாள அட்டை இல்லா தோருக்கான அனுமதியையே கூட்டுப்படைத் தலைமையகம் நிராகரித்து விட்டது.

இக்கப்பலில் பயணம் மேற்கொள்ளவிருந்த பயணிகளை இன்று புதன்கிழமை யாழ். செயலகத்திற்கு வந்து பயணத்தை உறுதி செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

மேலும் இக்கப்பல் சேவையில் பயணத்தை உறுதி செய்தவர்களை நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-4)

## காடுகளில் திக்குத் திக்காக உள்ள முகாம்களை மூடிவிட அரசு முடிவு

கொழும்பு, மே 31

கிழக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் காடுகளில் ஆங்காங்கே — தனித்தனியாக — அமைந்திருக்கும் இராணுவ முகாம்கள் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு இலக்காகி அழிக்கப்படுவதாகவும் —

அவ்வாறு தொடர்ந்து அழிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பதாலும் —

அப் பகுதியில் உள்ள சிறிய முகாம்களை மூடிவிட்டு சில இடங்களில் மட்டும் பெரிய படை முகாம்களை — கூடிய பாதுகாப்புடன் — அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரைக்கு மேற்கேயுள்ள காட்டுப்பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள சிறிய இராணுவ முகாம்களை மூடிவிட்டு அவற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு படையினர் சூடு; மீனவர் காயம்

மண்டைதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் கையில் படுகாயமடைந்தார்.

மண்டைதீவு, சிறுத்தீவு கடற்பிராந்தியத்தில் நேற்று காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த அண்ணாமலை சந்திரலிங்கம் (41 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15-51-13)

## தாண்டிக்குளத்தில் திங்கள் பயணிகள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 31

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தொலைத்தொடர்பு நிலையக் கோபுரம் தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்று முன்தினம் வடபகுதி பயணிகள் தாண்டிக்குளத்தில் தாக்கப்பட்டதாக நேற்று வந்த பயணிகள் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை வடக்கில் இருந்து வவுனியா சென்றவர்களும், வவுனியாவில் இருந்து இங்கு வந்தவர்களும் தாண்டிக்குளத்தில் படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

பயணிகளின் பைகள் துருவித்துருவி ஆராய்ந்து குண்டு இருக்கிறதா என்று கேட்டே தாக்கப்பட்டதாக பயணிகள் தெரிவித்தனர். (ஒ 3)

## நள்ளிரவில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மே 31

காரைநகர் இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணி தொடக்கம் அதிகாலை ஒரு மணி வரை சுற்றுப்புற குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடுமையான ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

கழிபுரம் பொன்னாலை அராலிப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதே வேளை ஊர்காவற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகா கூட்டணியுடன் நேற்று நடத்திய பேச்சு

கொழும்பு, மே 31

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தின் உத்தேச அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டணிக் குழுவுக்கு மு. சிவசிதம்பரம் தலைமை வகித்தார். பேச்சுக்கள் ஒரு மணி நேரம் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ)

## களம் காணாத கேணலுக்கு இரட்டித்த பதவி உயர்வு!

கொழும்பு, மே 31

போர்க் களத்துக்குச் செல்லாத ஸ்ரீலங்கா இராணுவ கேணல் ஒருவருக்கு இரட்டித்த பதவி உயர்வு கிடைத்துள்ளது குறித்து இராணுவ அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பனாகொட இராணுவ முகாமைச் சேர்ந்த கேணலுக்கே இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் ஆதரவு காரணமாகவே இவருக்குப் பதவி உயர்வு கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

எந்த ஓர் இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குபற்றாமல் இரட்டித்த பதவிஉயர்வைப் பெற்ற இந்தக் கேணல் எவ்வாறு இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றப் போகிறார் என்று இராணுவ உயரதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். [ஒ-10]

## தென்பகுதி முகாம்களில் இருந்து கிழக்குப் பகுதிகளுக்கு படையினர்!

### தியத்தலாவவில் பயிற்சி முடிந்த 1,000 பேர் விரைவு

கொழும்பு, மே 31

கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னோடியாக கிழக்கு முகாம்களுக்கு கூடுதல் படையினர் அனுப்பப்[illegible]றனர்.

தியத்தலாவ இராணுவ முகாமிலிருந்து இன்னும் சில தினங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரும் அதிகாரிகளும் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளி[illegible] கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கனேமுல்ல முகாமில் இருந்து இராணுவ கொமாண்டோக்களையும் பனாகொட, குருவிற்ற, அம்பேபுஸ்ஸ, முல்லேரியா ஆகிய இடங்களிலுள்ள மேலதிக படையினரையும் கிழக்குக்கு அனுப்ப முடிவாகியிருக்கிறது.

இதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-4)

## இரு பொலீஸார் காயம்

அம்பாறை, மே 31

காத்தான்குடியில் விடுதலைப்புலிகள் நடத்திய கிரனைட் தாக்குதல் சம்பவம் ஒன்றில் இரு பொலீஸார் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணுலகில்: 07 - 02 - 1933 விண்ணுலகில்: 24 - 05 - 1995

### திருமதி மார்த்தம்மா மார்க்

''நல்ல, போராட்டத்தைப் போராடினேன்.
ஓட்டத்தை முடித்தேன்.
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்''
2 தீமோ: 4:7

எங்கள் இனிய அன்னையே, அன்பின் சிகரமே, பாசத்தின் திருவுருவே, எங்கள் இல்லத்தின் ஒளி விளக்கே! உங்கள் பிரிவால் துடிக்கின்றோம் அம்மா, ஆறாது அம்மா எங்கள் மனம் என்றும். அம்மா உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

எங்கள் அன்னையின் பிரிவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து எங்கள் ஆறாத்துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறியோருக்கும், அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அனைவருக்கும் எங்கள் நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திரு. மா. ஞானப்பிரகாசம் (மகன்)
(உப அதிபர், யா / கொழும்புத்துறை சென். யோசப்ஸ் வித்தியாலயம்),
திருமதி வெனிற்றா றேவதி ஞானப்பிரகாசம் (மருமகள்)
(ஆசிரியை, யா / கொழும்புத்துறை துரையப்பா வித்தி.)
சேளி, பிறின்சிலி, கிஷானி (பேரப்பிள்ளைகள்)

41/1 B, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். [36868]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 27 — 11 — 1942 உதிர்வு: 02 — 05 — 1995

அமரர்
### மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன்
[ஓய்வு பெற்ற விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்]

அன்பின் திருவுருவாகவும் பண்பின் பிறப்பிடமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் வாழ்ந்து எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் இதய தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியம் 01 – 06 – 1995 வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, சகோதரர், சகோதரிகள்,
மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்
(8568)

## ஈராண்டு நினைவஞ்சலி



அவனியில் பிறப்பு: 28 — 06 — 1968

அமலன் அழைப்பு: 23 — 05 — 1993

அமரர்
### இராஜகோபால் பிறேம் ஆனந்
திதி: 31 — 05 — 1995

ஈராண்டு சென்றதுவா
நீ மறைந்து
யாறாது எம் சோகம்
மண்ணில் இருக்கும் வரை
சாகாது என்று எண்ணியே
இருக்கின்றோம் - ஆனந்தா
சாந்தி அடையட்டும் - அந்த
ஈசன் திருவடியில்.

அன்னாரின் திடீர் மறைவினால் தாங்கொணாத் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார், உற்றார்,
உறவினர்கள்.

இல. 81, காரைக்காட்டு ஒழுங்கை,
வண் — மேற்கு,
யாழ்ப்பாணம். (36867)

# தொலைக்கல்வி நிலையங்கள் மூடப்பட்டால்
# போதனாசிரியர்கள் எதிர்காலம் கேள்விக்குறி!

கொழும்பு, மே 31

தொலைக்கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் 43 ஆயிரம் ஆசிரியர்களின் பயிற்சிக்காலம் முடிவடையும் இத்தறுவாயில் இந்த நிலையங்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான போதனாசிரியர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது.

தொலைக்கல்வி நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான வசதியும், வாய்ப்பும் இல்லாத காரணத்தினால், அவர்களின் பயிற்சியை இலகுவாக்கும் பொருட்டு மகரகம தேசிய கல்வி நிறுவனத்தினால் 1986 முதல் தொலைக்கல்வி பயிற்சி நெறி ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு தமிழிலும், சிங்களத்திலும் 14 நிலையங்கள் அமைக்கப்பட்டன.

தொடர்ந்து 1991 இல் 43 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் பயிற்சியளிக்கும் விதத்தில் 225 தமிழ், சிங்கள தொலைக்கல்வி பயிற்சி நிலையங்கள் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டன.

இவற்றில் ஒரு நிலையத்துக்கு 5 பேர் வீதம் ஆயிரக்கணக்கான போதனாசிரியர்களும், இந்த நிலையங்களுக்குப் பொறுப்பாக 225 சிரேஷ்ட போதனாசிரியர்களும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சையில் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

தொலைக்கல்வி நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட போதனாசிரியர்கள் பாடசாலைகளிலிருந்து முழு நேரமும் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். அதேபோல் பகுதி நேர போதனாசிரியர்களும் வாரத்தில் 3 நாள்களுக்கு பாடசாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

1991 இல் நியமனம்பெற்ற 43 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சிக்காலம் முடிவடைந்து விட்டதாலும், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவைப்படுவதாலும் இவ்வாறு இயங்கிவந்த தொலைக்கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இந்த நிலையங்கள் மூடப்பட்டால் இங்கு கடமை புரிந்த போதனாசிரியர்களின் கதி என்னவாகும் என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது.

ஏனெனில் தொலைக்கல்வி நிலையங்களுக்கு சிரேஷ்ட போதனாசிரியர்களை நியமிக்கும்போது, அவர்கள் அதிபர் தரம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அந்த அடிப்படையிலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்நிலையங்களில் பயிற்சி பெற்ற பலர் இன்று அதிபர்களாக இருக்கிறார்கள். எனவே தொலைக் கல்வி போதனாசிரியர்கள் மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டால், தங்களிடம் பயிற்சி பெற்றவர்களுக்குக் கீழ் கடமையாற்ற வேண்டிய இக்கட்டான நிலைமை உருவாகும்.

மேலும், தொலைக்கல்வி பயிற்சி நெறிக்குப் பொறுப்பான சிரேஷ்ட போதனாசிரியர்களுக்கும் ஏனைய போதனாசிரியர்களுக்கும் தரம் III அல்லது அதிபர் தரம் கிடைக்கும் என்றும் கூறப்பட்டிருந்ததாம்.

ஆனால் இது சம்பந்தமாக எந்தவிதமான அறிவுறுத்தல்களும் இதுவரையில் வழங்கப்படாமலிருப்பதால் பெரிதும் குழம்பிய நிலையில் அவர்கள் காணப்படுகின்றார்கள்.

எனவே, இந்த விடயத்தில் தேசிய கல்வி நிறுவகமும், கல்வியமைச்சும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்தப் போதனாசிரியர் குறிப்பிட்டார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

'உதயன்' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- வல்வெட்டி ஒற்றுமை அணி எதிர் கண்ணகி 'பி' அணி.

★ 4-45 மணி:- ஞானமுருகன் அணி எதிர் ஆதிசக்தி 'ஏ' அணி.

★ ★ ★

வண. சகோதரர் ஹிலறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் லாசால் சகோதரர்கள் சபை நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் ஜொனியன்ஸ் 'ஏ' அணி.

★ 4 மணி:- உதயன் வி.க அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணி.

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நிலைய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- மட்டுவில் கலைவாணி வி.க எதிர் பண்டிதர் குடியிருப்பு பண்டிதர் வி.க

★ 4-00 மணி:- சுழிபுரம் சந்தியா வி.க. எதிர் நெல்லியடி நெப்டியூன்ஸ் வி.க.

(உ-117)

## தமிழ் மொழி கலைத்திறன் வலய நிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே. 31

யாழ் கல்வி வலயம் இரண்டுக்கான தமிழ்மொழி, கலைத்திறன் வலய நிலைப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளியும், சனியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 8-30 மணி முதல் நடைபெறவிருக்கின்றன.

வெள்ளிக்கிழமையன்று — கட்டுரை (பிரிவு 2), கவிதை (பிரிவு 3), பேச்சு (பிரிவு 2), பா ஓதுதல் (பிரிவு 2, 3, 4), வில்லுப்பாட்டு (பிரிவு 5 — திறந்த போட்டி) ஆகிய போட்டிகளும் — சனிக்கிழமையன்று — சாஸ்திரிய (சென்நெறி) இசை பிரிவு 2 — தனி), சாஸ்திரிய) சென்நெறி) இசை (பிரிவு 2 — ) குழு), ஆக்க இசை (பிரிவு 2, 3, 4, — குழு.) சாஸ்திரிய நடனம் (பிரிவு 2 — தனி) சாஸ்திரிய - நடனம் (பிரிவு 2) குழு ஆகிய போட்டிகளும் — இடம்பெறும்.

கோட்டநிலையில் முதலாம் இடம் பெற்ற போட்டியாளர்களை போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார்.

## பளைப் பகுதியில் விழுந்த ஷெல்கள்

தென்மராட்சி, மே 31

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பளையை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதனால் அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

(ஒ-117)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

வலிகாமம் மேற்கு மே, 31

வட்டுக்கிழக்கைச் சேர்ந்த இரண்டு கால்களும் நடக்க முடியாத திரு. க. நவரட்ணம் என்பவருக்கு முச்சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைப் பணிப்பாளர் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துக்கு வழங்கிய முச்சக்கர வண்டியை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அவருக்கு அன்பளிப்புச் செய்தார்.

(க-175)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை உடுவில் உபஅலுவலகம்

## அறிவித்தல்

### தாவடி இந்து மயான அபிவிருத்திச்சங்கம்

தாவடி இந்து மயானத்தைப் பராமரிப்பதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்காகவும், பாவனையாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவும் மேற்படி சங்கம் பொறுப்பாகவுள்ளது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

01-06 95ம் திகதி முதல் இம் மயானத்தில் தகனம் செய்வதற்கு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும். உரிய கட்டணங்களைத் தகனம் செய்வதற்கு முன்னர் சங்கப் பொருளாளரிடம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டை இரு பிரதிகளில் பெற்று, 2ம் பிரதியை மயானக் காவலாளியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை திரு. இ. பரமேஸ்வரலிங்கம், தலைவர், தாவடிப் பிள்ளையார் கோவிலடி என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டண விவரம்:-

1. தகனம் செய்வதற்கு (விறகு அடுக்குதல், எரித்தல் காடாற்றுதல், மேற்பார்வை உட்பட) ரூபா. 300. 00

கிடங்கு வெட்ட:-

| | |
|---|---|
| 6'X3'X4' | "500. 00 |
| 3'X3'X4' | "300. 00 |
| 5'X5'X4' [மாடு] | "400. 00 |

இம் மயானத்தைப் பாவிப்பவர்கள் தங்கள் ஒத்துழைப்பை சங்கத்திற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பாவனையாளர்கள் தகனத்திற்குத் தேவையான விறகை தாமே கொண்டு வரலாம்.

இம் மயானத்தில் எவ்வித கழிவுப்பொருள்களையும் போடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
30-05-95. [சி/5799]

## உ
## அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
# யுவ வருட மஹோற்சவம் - 1995

1. கொடியேற்றம்:- **03 - 06 - 1995** சனிக்கிழமை காலை 11·00 மணியளவில்

### திருவிழாக் கால நேர அட்டவணை

| | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | காலை | 8-30 | மாலை | — |
| பூசை | காலை | 9-15 | மாலை | 3-30 |
| தம்பபூசை | காலை | 10-00 | மாலை | 4 00 |
| வசந்தமண்டப பூசை | காலை | 10-30 | மாலை | 4-30 |
| திருவிழாப் பூர்த்தி | பிற்பகல் | 1-00 | மாலை | 6-30 |

2. சப்பறத் திருவிழா **11 - 06 - 1995** ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணியளவில்
3. தேர்த் திருவிழா **12 - 06 - 1995** திங்கட்கிழமை காலை 9-00 மணியளவில்
4. தீர்த்தத் திருவிழா **13 - 06 - 1995** செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில்

### தேர், தீர்த்தத் திருவிழாக் கால நேர அட்டவணை

| | தேர் | | தீர்த்தம் | |
|---|---|---|---|---|
| | காலை | மாலை | காலை | மாலை |
| அபிஷேகம் | 6-30 | — | 6-30 | — |
| பூசை | 7-00 | 4-00 | 7-00 | 3-00 |
| தம்பபூசை | 7-30 | 4-30 | 7-30 | |
| வசந்தமண்டப பூசை | 8-00 | 5-00 | 9-00 | 3-30 |
| | | | | கொடியிறக்கம் |
| மகா தீர்த்தம் | | | 10-00 | 5-00 |


தேர்த்திருவிழாவன்று பிற்பகல் 2-30 மணியளவில் தேர் மண்டபத்தில் பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று பிற்பகல் 3-30 மணியளவில் மூர்த்திகள் ஆலயத்திற்குள் எழுந்தருள்வர்.

5. பூங்காவனத் திருவிழா **14 - 06 - 1995** புதன்கிழமை
பகல் அபிஷேகம் நடைபெறும்- இரவுத் திருவிழா பிற்பகல் 3-00 மணியளவில் ஆரம்பமாகி 6-30 மணிக்குப் பூர்த்தியடையும்.

குறிப்பு:-
தேர்த் திருவிழா அன்னதானத்துக்கு உதவுபவர்களைச் செயலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும். அன்னதானத்துக்கு மூடையாக அரிசி வழங்குபவர்கள் தயவுசெய்து அதற்குரிய தொகையை பணமாகச் செலுத்தவும்.

ஆலய குருமார்களும்,
தர்மகர்த்தாக்கள் சபையினரும்
(8421)

## 31 -ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### இளையபிள்ளை தம்பிப்பிள்ளை
(வேலணை)

தோற்றம்: 15- 02- 1910 இறைவனடி: 01-05- 1995
திதி: 31- 05 - 1995

தந்தையை இழந்த எம்மை, சென்ற பதினைந்து ஆண்டுகளாகத் தந்தையாகித் தாயாகி உங்கள் இறுதி மூச்சு வரை எமக்கு உற்ற துணையாக இருந்து எம்மை யெல்லாம் இணைக்கும் பாலமாக விளங்கிய அன்புத்தாயே! உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்புநிறைந்த
குடும்பத்தினர்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (36869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்மாறியுள்ள அச்சுவேலி வைத்தியசாலையில்

# இடநெருக்கடியினால் நோயாளர்கள் அவதி!

வல்வெட்டித்துறை, மே 31

இராணுவ நடவடிக்கை காரணமாக புத்தூருக்கு இடம்மாறி உள்ள அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை நோயாளர்கள் இடநெருக்கடி காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இவர்களுக்கான அம்புலன்ஸ் வாகனமும் பழுதடைந்துள்ளது.

யாழ். சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள் கடந்த புதன்கிழமை அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை நேரில் ஆராய்ந்தனர். அதன் பின்னர் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மாத்திரம் அங்கு தொடர்ந்து இயங்க விடுவது என்றும் —

பிரசவ விடுதியையும் ஏனைய வார்ட்டுகளையும் புத்தூரிலுள்ள அரசினர் மத்திய மருந்துச்சாலை கட்டடத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(இ-135-155)

## மாணவருக்கு சத்துணவு

வடமராட்சி வடக்கில் 20க்கு மேற்பட்ட வறிய பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச சபை சத்துணவைக் கடந்த ஏப்ரல் மாதம் முதல் வழங்கி வருகிறது. (க-30)

## நாய்களுக்கு நோய் தடுப்பூசி

சண்டிலிப்பாய், மே 31

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி மருந்து போடப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக மானிப்பாய் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியும், தலைமை பொது சுகாதார பரிசோதகருமான திரு. த. மகாதேவா தெரிவித்தார்.

(க-135)

## புலிகளின் குரல் வானொலியில்

புதன் இரவு

31 - 05 - 1995

★ 8-02 — மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி, ந. கிருஷ்ணா எழுதிய "மாவீரர் புகழ் பாடுவோம்"

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — நாடகம்—த. பாபு எழுதிய "அங்கலாய்ப்பு" என்பன இடம் பெறும்.

01 — 06 — 1995

வியாழன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்

★ 7-15 — விடுதலை கீதங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — விடுதலை கீதங்கள் — நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்.

## தமிழீழ வானொலியில்

புதன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்

★ 5-03 — எழுச்சிக் கீதம்

★ 5-10 புதியவை

★ 5-15 — பட்பாடல்

★ 5-30 — அறிவூற்று

★ 6-00 — சிறுவர்களுக்குச் சில விநாடிகள்

★ 6-02 — உங்கள் தெரிவு

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6-20 — மீண்டும் உங்கள் தெரிவு

★ 6-30 — நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# 2 பைக்கெட் திரிபோஷா பெற 6 மைல் தூரம் பயணம்

## பளையில் அவலம்

இரண்டு பைக்கெட் திரிபோஷா மாவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆறு மைல் தூரம் செல்ல வேண்டிய அவல நிலை பளை பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பளைப்பிரதேசத்தில் கிளாலி, இந்நாவில், முருகானந்தாநகர், பளை பிரசவ விடுதி ஆகிய இடங்களில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குமான சிகிச்சைகள் மாதாந்தம் நடத்தப்படுகின்றன.

இச் சிகிச்சை நிலையங்களுக்கு வரும் போசாக்குக் குறைந்த குழந்தைகள், தாய்மார்கள் தமக்குரிய திரிபோஷா மாப்பைக்கெட்டுக்களை பளை கிராமிய வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளும்படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இயக்கச்சி, முருகானந்தாநகர், கிளாலி ஆகிய இடங்களிலிருந்து பளைக்கு வருவதற்கு போதிய வாகன வசதிகள் இல்லாததால் பெரும்பாலான மக்கள் சைக்கிளிலும், நடந்தும் வந்தே திரிபோஷா மாவை பெற்றுக் கொள்கின்றனர்.

சிலவேளைகளில் திரிபோஷா மா முடிந்து விட்டால் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

மேற்படி சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லும் மக்களில் சிலர் இவ்வளவு தூரம் செல்வதற்கு வசதியில்லாததால் திரிபோஷா மாவை பெற்றுக் கொள்ளச் செல்வதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

# சோறு கறி எதிர்பார்த்த ஆஸ்திரேலிய அமைச்சர்

கொழும்பு மே, 31

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கரெத் எவான்ஸுக்கு ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் விருந்து ஒன்றை அளித்தார்.

மவுன்ட் லவினியா ஹொட்டலின் மெக்சிக்கன் வகை உணவு அவருக்கு வழங்கப்பட்டது. காளான் சூப்புடன் விருந்து ஆரம்பமாகியது.

"இது என்ன? நான் நல்ல சோறும் கறியும் அல்லவா எதிர்பார்த்தேன்" என்று ஆஸ்திரேலிய அமைச்சர் திரு. லக்ஸ்மன் கதிர்காமரிடம் கூறினார்.

திரு கதிர்காமர் சிறிய புன்சிரிப்புடன் சமாளித்துக் கொண்டார்.

# எதிர்ப்பு நடவடிக்கை; இந்துப் பேரவை ஆராயும்

இந்துக்களின் புனிதத் தலங்கள் மீதான தாக்குதல்கள், அரசின் அடக்குமுறைகள் ஆகியவை சம்பந்தமான இந்துக்களின் மத உணர்வை வெளிப்படுத்தும் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை நடத்த யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து இந்துசமய சங்கங்கள் சபைகள், இந்துக் கோயில்களின் அறங்காவலர்கள், பரிபாலன சபைகள் ஆகியவற்றையும் இந்துக்குருமார்கள், இந்துமத அபிமானிகள் ஆகியோரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இந்துசமயப் பேரவை கோரியுள்ளது. (க)

# தென்மராட்சிப் பகுதியில் கள் உற்பத்தி அதிகரிப்பு

தென்மராட்சி மே 31

பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க தென்மராட்சி கொத்தணியில் இவ்வருடம் கள் உற்பத்தி முன்னைய வருடங்களை விட இரு மடங்கு அதிகரித்துள்ளது.

கொடிகாமம், பளைப் பிரிவுகளிலேயே இவ் அதிகரிப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்படும் கள்ளு மதுசார உற்பத்திக்காக வரணி, கிக்கம் ஆகிய வடிசாலைகளுக்கு தினமும் லொறிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

இதனால் இவ்வருடம் சாராய உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய இடங்களில் வெல்லம் தயாரிப்பது நிறுத்தப்பட்டு பதநீர் உற்பத்தி இல்லாததாலும் —

கடந்த வருடங்களைப் போல் இம்முறை கள்ளு உற்பத்தியில் கட்டுப்பாடு இல்லாததாலும் —

குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி பகுதியில் தங்கியுள்ள சீவல் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலுமே இவ்வாறு கள் உற்பத்தி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-5-117)

# ஆசிரியரின் புதிய சம்பளம் நிலுவையுடன் கிடைக்கும்

அரசாங்கத்தினால் ஜனவரி மாதம் முதல் ஆசிரியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட புதிய சம்பளம் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இம் மாதச் சம்பளத்துடன் ஏப்ரல் மாதம் வரையான நிலுவையுடன் வழங்கப்படுகிறது.

பளைக் கல்விக் கோட்ட ஆசிரியர்களின் புதிய சம்பளம் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட இருந்தது.

புதிய சம்பள அளவுத் திட்டத்தின் படி 20 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவருக்கு ரூபா 8 ஆயிரத்து 500 வரை சம்பளமாக கிடைக்க உள்ளது.

(இ 117)

## பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகள்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த 27ஆம் திகதி மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இப் போட்டிகளில் சாவகச்சேரி — இந்துக்கல்லூரி முதலாம் இடத்தையும், மட்டுவில் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க-31)

## பாராட்டு விழா

மாதகல் கல்வி அபிவிருத்திச் சபையினர் வித்துவான் பொன். கந்தசாமி எழுதிய "நுணசைஅந்தாதி" நூல் வெளியீட்டு விழாவையும் மாதகல் நுணசை வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கட்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களுக்கும் பரிசில் வழங்கி கௌரவிக்கும் விழாவையும் இன்று புதன்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு மானிப்பாயில் இயங்கும் மாதகல் நுணசை வித்தியாலய அரங்கில் வி. சிற்றம்பலம் தலைமையில் நடத்தவுள்ளனர்.

இவ் விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதரும் புலவர் அருட்கவி சீ. விநாசித்தம்பியும் கலந்துகொள்வர்.

(5-117)

மந்திகை ஆஸ்பத்திரியில்

# சத்திரசிகிச்சை கிளினிக் பின்போடப்பட்டுள்ளது

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இம் மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் நடைபெற இருந்த சத்திர சிகிச்சைக் கிளினிக் பிற்போடப்பட்டுள்ளது.

இதுவரை இவ் வைத்திய சாலை சத்திரசிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய பிரஞ்சு வைத்தியக்குழுவைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் சந்திரோ கடந்த சனிக்கிழமை தமது தாய் நாட்டிற்கு பயணமானதை அடுத்தே கிளினிக் இடை நிறுத்தப்பட்டது.

எனினும் அந்த இடத்திற்கு பிரஞ்சுக் குழுவைச் சேர்ந்த பிறிதொரு சத்திரசிகிச்சை நிபுணர் எதிர்வரும் 3ஆம் திகதியில் இருந்து நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜெனத்த மாலா என்பவரே இவ்வாறு புதிதாக நியமிக்கப்படவுள்ளவர் என்பது தெரியவருகிறது.

(இ-5-15-155)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# அம்புலன்ஸ் வாகனம் விரைவில் வந்து சேரும்?

யாழ். போதனா வைத்திய சாலைக்கு வெகுவிரைவில் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றை அனுப்பிவைக்கப்படும் முயற்சிகளில் சுகாதார அமைச்சு ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் கலந்துரையாடலின்போது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரால் பிரஸ்தாபிக்கப்பட்ட சில கோரிக்கைகளுக்கு இணங்கவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படுவது என தெரியவருகிறது.

யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்து இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட பணிப்பாளர் யாழ். ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் பற்றி தெளிவாக எடுத்து விளக்கியதை தொடர்ந்து, அமைச்சு சில நடவடிக்கைகளை உடன்மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளது.

மருந்து பற்றாக்குறை எரிபொருள் பற்றாக்குறை, வாகனப் பற்றாக்குறைகள் பற்றி முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

(இ-5-15)

## கலந்துரையாடல்

பாடசாலைகளில் மாக்கன்றுஉற்பத்தித்திட்டம்-1995 சம்பந்தமாக யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள வலயம் இரண்டு பிரிவினர் நடத்தும் கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (-க152)

# பல உயிர்க்கொல்லி நோய்களின் மூலவேராக இருக்கும் புகைத்தல்

இன்று மே 31 சர்வதேச புகைத்தல் மறுப்புத் தினம் ஆகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன முமத்தினத்தை இன்று அனுஷ்டிக்கிறது.

"தீயவை தீயபயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்பது தமிழ் மறை. எனவே தீயபழக்கங்கள் சார்ந்தோரை சாம்பராக்கிவிடும் தீயை விடக் கொடியவை.

புகைக்கும்போது உள்ளிழுக்கும் புகைக்கலவையில் 1,000க்கு மேற்பட்ட உடல் நலத்துக்கு தீமை பயக்கும் மூலகங்களும் உள்ளிழுக்கப்படுகின்றன. அவற்றுள் 18 வகையான மூலகங்கள் கொடிய நச்சுத் தன்மை உடையவை. அவற்றுள் குறிப்பானவை (1) குருதியின் ஒட்சிசன் அளவைக் குறைக்கும் காபனோர் ஒட்சைட் Co புகைக்கும்போது இரத்தத்தில் உள்ள காபனோர் ஒட்சைட் 4%—5% தால் உயர்கின்றது. இரத்தத்தில் காபனோர் ஒட்சைட்டின் அளவு 4% இருந்த லே ஒட்சிசன் பற்றாக்குறை நோய் "கைபொக்சியா" (Hypoxa) ஏற்படும் ஒட்சிசனை விட காபனோர் ஒட்சைட் இரத்தத்தில் உள்ள கீமோகுளோபினுடன் மிக விரைவில் இணைகின்றது. (2) மர்றது உடல்புற்று நோய் தகக்களை ஏற்படுத்தும் 'தார்' (Tar) என்பது. (3) சைடரோ சையனைட் (Hcn) இது ஒரு சிகரட்டில் 160—400 மைக்கிரோகிராம் உள்ளது. இந்நஞ்சுடன் நாம் உண்ணும் உணவில் பொட்டாசியம் மிகுன் இதனுடன் இணைந்து தற்பொழுது தற்கொலைக்குப் பயன்படும் பொட்டாசியம் சையனைட் நஞ்சாகின்றது. (4) மற்றையது உடலுக்கு உற்சாக மூட்டி — குழை கொடுத்து அடிமைப்படுத்தும் அறக்கும் நஞ்சான நிக்கோற்றீன் (Nicotine) ஆகும். இந்நஞ்சு இதயத்தின் தசைகளில் ஒழுங்கீனமான தூண்டல்களை ஏற்படுத்துகின்றது. இதனால் நாடித் துடிப்பு அதிகரித்தல், இரத்த அழுத்தம் தற்காலிகமாய் அதிகரித்தல், குருதிச்சிறுதட்டுக்களின் ஒட்டும் தன்மை அதிகரித்தல், உடலின் வெப்பநிலை குறைத்தல் போன்ற தீய விளைவுகளை உடலில் 'புகை' உடனே ஏற்படுத்துகின்றது நிக்கோற்றீன் பாவிப்பவரிடையே அடிமை நிலையினை (Dependancy) உண்டாக்கின்றது.

மது அடிமை நிலையைவிட நிக்கோற்றீன் அடிமை நிலை இலகுவில் கைவிட முடியாதது. இது ஒரு போதைப் பொருள் [Drug] என்பதால் இதற்கு அடிமையாக இரண்டு (2) சிகரட்டுக்கள் போதுமானது. இன்று புகைப்பவரில் 20% மாணவர்கள் 15—20 வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் 1972—1984 ஆண்டுகளில் எடுத்த மதிப்பீட்டின் படி முந்திய ஆண்டினைவிட இலங்கையில் இதன் பாவனை 75% ஆல் அதிகரித்துள்ளது.

### புகைப்பதால் ஏற்படும் தீமைகள்

★ இது மக்களின் பொருளாதாரத்தை பாதிக்கின்றது. தினமும் 20 சிகரட் புகைப்பவருக்கு பத்து வருடங்களுக்கு இன்றைய பெறுமதியில் செலவாகும் பணம் ரூபா மூன்று லட்சம் இன்று ஒரு பைக்கற் சிகரட் வாங்கும் பணத்துக்கு 3 கிலோ அரிசி வாங்க முடியும்.

★ சிகரட் புகைக்கின்றவர்கள் புகைக்காதவர்களை விட 5—10 வருடங்கள் முன்பதாகவே இறந்து விடுகின்றனர்.

★ கொலை, கொள்ளை போன்ற தீயசெயல்களைச் செய்ய இது உடலுக்கு உற்சாகமளித்து தூண்டுவதுடன் மதுபோதையில் இதனைப் பாவிப்பவராலேயே உலகில் அதிக 'தீ' விபத்துக்கள் ஏற்படுகின்றன.

★ புகையிலை செய்கைக்குப் பயன்படும் பசளையில் அதிக யூரேனியமுள்ளது. இதனால் ஏற்படும் கதிர்வீச்சால் [Radioactivities] சூழல் மாசடைவதுடன், கொடிய புதுப்புது நோய்கள் ஏற்படுகின்றன.

தினம் ஒருவர் 15 சிகரட் பாவிப்பின் அதன் மூலம் ஏற்படும் X கதிர் வீச்சானது 300 — X — கதிர்ப்படங்களை எடுப்பதற்குத் தேவையான X கதிர் வீச்சுக்கு போதுமானது கதிர் வீச்சே சுவாசப்பைப் புற்று, கருச்சிதைவு என்பவற்றிற்கு முக்கிய காரணம்

★ 1980இல் இலங்கையில் 35 000 ஏக்கர் பசளை நிறைந்த பயனுள்ள விவசாய நிலம் இப்புகையிலைச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது ஒரு ஏக்கரில் செய்கை பண்ணப்படும் புகையிலையை பதனிட ஒரு ஏக்கரில் வளரும் விறகு தேவை. எனவே விவசாயத்துக்கு பயன்பட வேண்டிய 7 ஆயிரம் ஏக்கர் நிலம்; போதைப் பொருளான புகையிலைச் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### புகைப்பதால் ஏற்படும் நோய்கள்

புகைத்தலால் பல்வேறு உயிர் கொல்லி நோய்கள் ஏற்படுகின்றன. புகைத்தல்



உடம்பின் சகல திட்டங்களையும் பாதிக்கிறது. புகைப்பவரது நோய் எதிர்ப்பு வலுவினை (Immunity) எயிட்ஸ் நோயி போன்று குறைந்து விடுகின்றது பாலியல் உணர்வை (Libido) மழுங்கடிக்கின்றது; கண் பார்வையை இழக்கச் செய்கின்றது (Smokers blind ness)

அது சுவாசத்திட்ட உறுப்புக்களை பாதிப்படையச் செய்து தொடர்ச்சியான இருமல் [Smokers Cough] ஆஸ்த்மா [Asthma], நிலைமை நீடிப்பின் சுவாசப்பை சுருங்கி விரியும் மீள் சக்தி பாதிப்படைந்து. "எம்பசிமா" ஏற்படுகின்றது. புகைப்பவர்களில் 90% மானவர்கள் சுவாசப்பைப் புற்றினாலும் 75% மானவர்கள் சுவாசப்பை அழற்சியினாலும் 25 மாணவர்கள் இருதய நோயினாலும் மரணம் அடைகின்றனர். புகைப்பவர்களுக்கும் புகைக்காதவர்களுக்கும் வாயில் போடுபவர்களுக்கும் வாய், குரல்வளை, களம், குடல், வயிறு, சிறுநீர்ப்பை, கருப்பை போன்றவற்றில் புற்று ஏற்படும் வாய்ப்பு அதிகம் பேலும் இவர்களுக்கு சலப்பை ஈரல் புறஸ்ரேற் போன்ற உறுப்புக்களிலும் புற்று ஏற்படுகின்றது;

★ புகைத்தல் குருதிக் குழாய்களின் உள்சுவர்களை பழுதடையச் செய்து கல்சியப் படிவங்களை ஏற்படுத்தி அடைப்பினை ஏற்படுத்துகின்றது. இதனால் மாரடைப்பு Myocardial - Infaction] பாரிசவாதம் (Stroke) இரத்த அழுத்தம் (Hypertension) என்பன ஏற்படும் புகைக்காதவரை விட புகைப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு 70 வீதத்தால் அதிகம்.

★ அடிக்கடி வெறும் தேநீருடன் பீடி புகைப்பவர்களுக்கு கால் பாதங்களுக்குச் செல்லுகின்ற இரத்த சுற்றோட்டம் தடைப்படுவதால் கலன் அழிவு ஏற்பட்டு கால்விரல் அழுகி விழுகின்றது. (Buerger's Disease)

### புகைத்தலைக் கைவிட சில யோசனைகள்

இனிப் புகைப்பதில்லை என உறுதியான தீர்மானத்தை எடுக்கல், புகைப்பிடிக்கும் சூழலில் இருந்து விலகி வாழ்தல், புகைப்பிடித்தலுக்கு பயன்படும் எஞ்சியுள்ள பொருள்களை வீட்டிலிருந்து வீசி விடுதல். இப் பழக்கத்துக்கு எதிரானவர்களுடன் இணைதல், தினமும் 2தடவை கடுநீரில் குளித்து விட்டு, குளிர்பானங்கள் அருந்துதல், திறந்த வெளியில் தினமும் உடற்பயிற்சி செய்தல் - குறிப்பாய் ஆழமான சுவாசப் பயிற்சி, போசாக்கான உணவை தேர்ந்து உண்ணல்-குறிப்பாய் பழவகைகள் இவை இரத்தத்திலுள்ள புகையினால் ஏற்பட்ட நச்சுப் பொருள்களை அகற்றும், உற்சாகம் ஊட்டும் பொருள்களான மது, போதைப் பொருள்கள், தேநீர், கோப்பி என்பவற்றைத் தவிர்த்தல், வாசனைப் பொருள்கள் Spices, மசாலா வகை, உப்பு, காரவகை போன்ற வற்றை உணவில் தவிர்த்தல். ★

வைத்திய கலாநிதி

ஆ. பேரின்பநாதன்

# சித்த வைத்தியர்களுக்காக ஓர் அரச அமைப்பு உருவாக வேண்டும்

## மருத்துவ மலர் வெளியீட்டு விழாவில் உரை

"சித்த வைத்தியர்களுக்காக ஒரு அரச அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்". லங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் கவிசாளர் வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்ரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

"மருத்துவ மலர்" சித்த மருத்துவ ஆராய்ச்சி இதழ்—2 வெளியீட்டு விழா லங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தில் நடைபெற்றது.

இதற்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது: சித்த மருத்துவர்களின் நலன்களைப் பேணுவதற்கும், சித்த மருத்துவர்களை பதிவு செய்வதற்கும் இன்றைய சூழ்நிலையில் சித்த மருத்துவ சபையொன்று அவசியம். இந்தச் சூழ்நிலையில் சித்தமருத்துவம் பேணப்படுவது அவசியமாகும்.

ஏனெனில் பலவித நிலைகளிலும் சித்த மருத்துவத்தில் கலப்படங்கள், இடைச்செருகல்கள், தவறான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சித்த மருத்துவத்தின் தனித்தன்மையைப் பேணி பாதுகாப்பது சித்த மருத்துவர்களினதும், சித்த மருத்துவ நலன் விரும்பிகளினதும் தலையாய பணியாகும்.

சித்த மருத்துவர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தியும், சித்த மருத்துவ ஆராய்ச்சிகளை வெளியிடவும், சித்த மருத்துவ நிகழ்வுகளைப் பதிவு செய்யவுமே "மருத்துவ மலர்" என்ற இதழினை ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டு வருகிறது என்றார்.

"மருத்துவ மலர்" இரண்டாவது இதழை தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் வெளியிட்டு வைக்க அதன் முதல் பிரதியை வைத்திய கலாநிதி எம். தேவமதுரம் பெற்றுக் கொண்டார்.

இவ்வெளியீட்டு விழாவில் வைத்திய கலாநிதிகளான இ. தவமணிதேவி, சு. சிவானந்தன் வ. திருநாவுக்கரசு, திருமதி இ. பேரம்பலம், அரச சித்த வைத்திய அதிகாரிகளான செல்வி சு. ஸ்ரீகமலாதேவி, திருமதி சு. சற்குண சரோஜினிதேவி, திரு. இ. ஜெயகுணரத்தினம், திரு. இ. விஜயசேகரம் ஆகியோரும் உரையாற்றினர், ஆராய்ச்சி மன்றத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி து. சண்முகராஜா நன்றியுரை ஆற்றினார்.

(க-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாள் ஒன்றுக்கு இரண்டு போத்தல் பால் எடுக்கும் ஆடு விற்பனைக்குண்டு. 55, சீனியர் லேன், கலட்டி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். [8563]

### காணி விற்பனைக்கு

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் எட்டுப்பரப்பு பனம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க. முருகையா, கிராமிய வங்கி, நீர்வேலி. [36779]

### கார் விற்பனைக்கு

Japan தயாரிப்பு Mitsubishi கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: 102, ஆடியபாதம் வீதி, நல்லூர். நேரம் காலை 10-1 வரை. மாலை 3-6 வரை. (36815)

### தென்னை நாற்றுக்கள்

உயர் நடுகைக்கு ஏற்ற நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. முகவரி: கஜன் கடையடி சண்டிலிப்பாய் மீசாலை [36853]

### வாங்கலாம் விற்கலாம்

நஷனல் RX புதிய ரக ரேடியோ 13", 14" கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிகள் நியாய விலையில் வாங்கவும் விற்கவும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்! வீனஸ் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [வானவில் கூல்பார் அருகில் ஆரியகுளம் சந்தி.] (சி 1410)

### VENUS ANTENNA

To View Rupavahini, Madras Programmes, Fixing Venus Antenna Repairing Antennas, Radios, T.V-Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works. 284: Stanley Road [Ariyakulam Junction] Jaffna. Branch, Kandy Road, Chavakachcheri. [C/1351]

### பிரிவுபசாரம்

ஓய்வுபெற்றுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திரு. சி. சந்திரசேகரத்தின் சேவையைப் பாராட்டி பிரதேச சபை நலன்புரி சங்கம் பிரிவு சாரம் ஒன்றை நடத்தியது. [க]

### கோழிநோய் தடுப்பூசி

வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8-30 மணி முதல் கோழி நோய்க்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

ஜனசக்தி மூலம் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு செயற்கைமூலம் சினைப்படுத்தும் சேவையும் நடைபெறுகின்றது. [க-161]

### சிரமதானம்

யாழ்ப்பாணம், மே 31

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மாணவர்கள் கடந்த 26ஆம் திகதி மானிப்பாய் பாவீரர் நினைவாலய பகுதிகளில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (க)

### காய்ச்சல் நோயாளிகள்

தென்மராட்சி, மே 31

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதம் (ஏப்ரல்) ஆயிரத்து 180 பேர் மலேரியாக் காய்ச்சலினாலும், 700 பேர் மூளைக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற 16 ஆயிரத்து 612 பேரில் 4 ஆயிரத்து 663 பேர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பளைப் பகுதியில் ஆயிரத்து 751 பேர் காய்ச்சலினாலும், இவர்களில் 391 பேர் மலேரியா காய்ச்சலினாலும் 40 பேர் மூளைமலேரியாக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-117)

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

### பெந்தேகொஸ்து செப விழா

யூன் மாதம் **1995** 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறும்

✶ நிகழ்ச்சிகள் ✶

நாள்தோறும்

| | | |
|---|---|---|
| காலை | 7-00 மணி | — பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| காலை | 9 00 மணி | — வேத வகுப்பு |
| காலை | 10-30 மணி | — செபக் குழுக்கள் |
| நண்பகல் | 12-00 மணி | — பரிந்து வேண்டல் |
| பிற்பகல் | 2-30 மணி | — வாலிபர் கூட்டம் |
| மாலை | 4-00 மணி | — நற்செய்திக் கூட்டம் |

இந்த நாட்களில் ஆண்டவர் பலத்த காரியங்களைச் செய்வாரென்று காத்திருப்போடு செபிக்கவும்.


பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் அப். 1:5

யாவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்

**(Rev. Sevak Sam Alfred)**
**(சாம் அண்ணன்)**

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
மருதனாமடம்,
சுன்னாகம். (36848)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லையா யோகரத்தினம்

(முன்னாள் நாதன்ஸ்ரோர்ஸ் (ஒட்டுக்கடை) உரிமையாளர்)

மண்ணில்: 09-10-1916 — விண்ணில்: 11-06-1994

**ஆண்டுத்திதி இன்று: 31-05-1995**

"வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து - எம்மை
அன்புடன் காத்த நீங்கள்
விண்ணுலகம் சென்று ஈசன் விடுதலைப்பெற்று
ஆண்டொன்று ஆனதோ இன்று - ஆனாலும்
தவிக்கின்றோம் உங்கள் அன்பு முகம் காண."

ஈசன் அடியினில் என்றும் இணைபிரியாதிருக்க பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்,

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. [36804]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 27 – 06 – 1932

உதிர்வு: 01 – 05 – 1995



அமரர்

### திருமதி நீரா செபஸ்ரியன்

(இளைப்பாறிய ஆசிரியை)

ஒரு திங்கள் கணப்பொழுதாய் உணரவைத்தே
உள்ளமெல்லாம் குடியிருக்கும் தாயே அம்மா
பெருகுமொளி வதனத்தின் சிரிப்பும் அன்பிற்
பிறந்தினிக்கும் சொல்லமுதும் யார் மறப்பார்?
அருகிருந்த அணைக்கின்றீர் அன்னமூட்டி
அணையாத மணிவிளக்காய் ஒளிகாலுகின்றீர்
சிரவமே தேட முடியாத சொத்தே
தெய்வ மகள் வானத்தே திகழ்கின்றீர்

இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கவும்.

பிரிவால் துயருறும்
கணவன், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, மாட்டின் ஒழுங்கை
யாழ்ப்பாணம். (3682..)

# வீரம், போர் எம்முடன் இணைந்தவை என்பதை புறநானூறு காட்டுகிறது

## வித்தி நினைவுரையில் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம், மே 31

வீரத்தாய்மார்கள் குறித்தும் தமிழருக்குரிய தனிச் சிறப்புக்கள் குறித்தும் புறநானூற்றுப் பாடல்கள் நமக்குக் கூறுகின்றன. வீரமும் போரும் நமது வாழ்வியலோடு இணைந்தவை என்பதை இது காட்டுகிறது.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மூன்றாவது நினைவு தினத்தை முன்னிட்டு கைலாசபதி கலையரங்கில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற நினைவு நாள் நிகழ்வில் நினைவுப் பேருரை யாற்றிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் பேசும் போது கூறியதாவது.

வீரமகனின் தலையாய கடமையை போற்றும் வீரத்தாய் அவனது பிறப்பில் பெருமிதமடைந்தாள். ஒரு வீரமகனின் மரணம் தனியே தாய்க்கு மட்டும் துயர்தருவதல்ல அவனது மரணத்தால் ஊரே துயருறுகிறது என புறநானூறு கூறுகிறது. வீரக்கற்களை நட்டுத் தொழும் மரபு பண்டைக்காலத்தில் இருந்தது. வீரக்கற்களைக் கண்டால் வணங்காமல் செல்ல வேண்டாம் எனப் புறநானூறு கூறுகிறது. பேராசிரியர் வித்தியானந்தன் தமிழர் சால்பு என்ற தொடரை ஆக்கித் தமிழுக்கு அளித்தவர். "புறநானூறு காட்டும் தமிழர் சால்பு ஒரு மீள்பார்வை" என்ற பொருளில் பேராசிரியர் சண்முகதாஸ் பேசும்போது இவ்வாறு கூறினார்.

துணைவேந்தர் பேராசிரியர் குணரத்தினம் தனது தலைமையுரையில் கூறியதாவது:

பேராசிரியர் வித்தியானந்தன் வளாகத் தலைவராகவும் முதல் துணை வேந்தராகவும் பணியாற்றிய காலத்தில் தமது அயராத உழைப்பு ஆளுமை தனிப்பட்ட செல்வாக்கு என்பவற்றால் மருத்துவ விவசாய பீடங்கள் நிறுவக் காரணமாக இருந்ததுடன் பொறியியல் பீடத்தையும் உருவாக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

எனினும் அன்றைய அரசியல் காரணமாக பொறியியல்பீடம் கைகூடவில்லை நினைக்கிறேன் அவர் ஆரம்ப காலத்தில் வித்திட்ட காத்திரமான அத்திவாரமே இன்றைய நிலையிலும் கூட நாம் உறுதியாக இயங்க வழிகாட்டியாக அமைகிறது. தமிழ் மொழியியல் குறித்த சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுரையை அடுத்தாணவராக விளங்கிய பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் நிகழ்த்துவது பொருத்தமானது. இவ்வாறு துணைவேந்தர் குணரத்தினம் பேசும் போது கூறினார்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசும் போது கூறியதாவது:

பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி எமது பண்பாடு கலாச்சார சால்புகளிலும் மக்களுக்கும் பிரதேசத்திற்கும் பணியாற்றிய பேராசிரியர் வித்தியானந்தன் நுண்கலைப்பீடம் தொடங்கவும் காரணமாக விளங்கியவர் இன்று நுண்கலைபட்டம் பெற்று மூன்று மாணவிகள் வெளியேறியுள்ளனர். மற்றவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற அவரது நினைவு குறித்த இந்த உரை பழைய தமிழ் நாகரிகம், பண்பாடு போன்றவற்றை முன்னைய இலக்கியங்களில் இருந்து நாம் பெறமுடியும் என்பதையும் சமகால அரசியல் சமூகத்துடனான கல்வி விடயமாக அமைந்தது என்பதையும் உணரக்கூடியதாக இருந்தது. இவ்வாறு அவர் பேசும் போது கூறினார். (க-111)

## கண்ணீர் அஞ்சலி

முத்துத்தம்பி மகாவித்தியாலய பகுதித்தலைவர்
திரு. க. பாலசிங்கம் தம்பதிகளின்
இளைய புத்திரன்

### செல்வன் தனுராஜ்

அவர்களின் திடீர் மரணத்தினால் துன்பப்படும் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவருக்கும் எங்கள் கல்லூரியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி. [36866]

விண்ணக இன்பத்தின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வரவு: 13 – 01 – 1936

விண்ணக வரவு: 02 – 05 – 1995



### அமரர் அந்தோனி தாவீது [டேவிட்]

(யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்)

விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுவதில்லை.

அன்பு நிறைந்த எம் தலைவா! உம்மை நினைக்கையிலே - எம் உள்ளம் உருகுதையா. மூன்று பத்து நாட்கள் ஆகினவே உங்கள் அன்புருவம் நாம் கண்டு. ஆறவில்லை அந்தக் காயம் - இனி அழுது இது தீராது, சாற்றி எது மாறாது உமது ஆன்மா இறை இன்பத்தில் இணைந்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை 1-6-95 வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும், தொடர்ந்து நண்பகல் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். [36865]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 – 03 – 1932



மறைவு: 31 – 05 – 1991

### அமரர் டாக்டர் ஜே. பி. வி. பிலிப்ஸ்

(M B B S. Cey J P U M. All Cey.)
(உரிமையாளர் பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோம்)

ஆண்டு நான்கு சென்றாலும்
ஆறுமோ எம் துயரம்
உம்மையே எண்ணித் தவிக்கின்றோம்
உம் நினைவுகளே என்றென்றும்

மனைவி, பிள்ளைகள்,
பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோம் ஊழியர்கள்,

(8...)

## போர்க்கால கருத்தரங்குகள்

வலி தெற்கு, மே 31

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் இடம்பெற்றுவரும் போர்க்கால சூழ்நிலைபற்றிய நிலைப்பாட்டினை மக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் போர்க்காலக் கருத்தரங்குகள் மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, கட்டுடை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. (க-152)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### முது தத்துவமானி தகுதிகாண் தேர்வு 1994 கலைப்பீடம்

முது தத்துவமானி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மொழியியல் நுண்கலை வர்த்தகம் நடனமும் சங்கீதமும், முகாமைத்துவம்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 23-06-1995 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களை பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளையை அல்லது தபால் கட்டளையுடன் முத்திரை ஒட்டிய சுயவிலாசம் இடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 30-06-1995க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இத் திகதியின் பின்பு வரும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்.
29-05-1995 [ -1278]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 08-06-1930

கர்த்தருக்குள்! 31-05-1994

### ஆதர் கணேசபிள்ளை யோசேப்

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.

செல்வதேவி யோசேப்
(மனைவி)

199/1, கிராஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (36813)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அலைவரிசை மாறாக் கெடுபிடி

வெளிநாடுகளிலும், வெளி மாவட்டங்களிலும் இருந்து வடபகுதிக்கு வரும் தபால்களை கிழித்துச் சோதனையிட்ட பின்னர் அனுப்புவதற்கு ஏற்பாடாகி உள்ளதாக அறியப்படுகிறது.

அந்தச் சோதனையின் பொருட்டே வடபகுதிக்கு வரவேண்டிய 373 தபால் பொதிகளும் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்திலும், போர் நடந்துகொண்டிருந்த வேளை, வடபகுதிக்கான தபால்களைக் கிழித்துச் சோதனை செய்த பின்னரே படையினர் அவற்றை அனுப்பினர்.

இதனால் தபால் விநியோகத்தில் நான்கு ஐந்து மாதங்கள் என்ற தாமதம் உண்டானது மட்டுமன்றி—

வடபகுதி மக்களுக்கு வெளிநாடுகளில் உள்ள அவர்களின் உறவினர்கள் அனுப்பிய பணம் மற்றும் டிராப்டுகள் என்பன படையினரால் கையாடப்பட்டதும்—உண்டு.

சர்வதேச தபால் சட்ட விதிகளுக்கு ஏற்ப, விலாசதாரர் ஒருவருக்கு அனுப்பப்படும் கடிதத்தை அவருக்குச் சேர்ப்பிக்காமல் விடுவது குற்றத்துக்குரிய செயலாகும். அவரது கடிதத்தை உடைத்து அதில் உள்ள குடும்ப இரகசியங்களைப் படிப்பதும், அதற்குள் இருக்கும் பொருள்களைக் கையாடுவதும் பாரதூரமான குற்றமாகும். தனியான் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

மேலும் ஒருவருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தை அவரிடம் சேர்ப்பிக்காமல் விடுவது நம்பிக்கை மோசடியும் ஒப்பந்த மீறலுமாகும்.

அரச படையினரின் இந்த அடாத்தான செயலால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும், இழப்புகளும் பல.

முந்திய அரசின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியிலேயே இந்தக் கெடுபிடி தளர்த்தப்பட்டது.

பழைய அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்திய கெடுபிடியை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப் படையினர் முடிவு செய்திருப்பது கண்டனத்துக்கு உரியதாகும்.

தமிழர்கள் சம்பந்தப்பட்ட எந்த விவகாரத்தையும் "பாதுகாப்புக் காரணம்" என்று முத்திரை குத்தி, தமது வசதிக்கான வாய்ப்புகளை உண்டாக்கிக் கொள்வது சிங்கள அரசுகளைப் பொறுத்த வரையில் ஒன்றும் புதியதல்ல.

சட்டங்கள், அடிப்படை உரிமைகள், சம உரிமைகள் என்று வாயளவில் கூறினாலும் தமிழர்களானால் அவை செயலளவில் பொருந்தா என்ற போக்கிலேயே சிங்கள அரசுகள் நடந்துகொள்கின்றன.

இதனைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு தமிழர்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் தாம் நினைத்த மாதிரி எப்படியும் நடந்துகொள்ள, கெடுபிடி செய்ய படையினர் பின் வாங்குவதில்லை.

தமிழர்களைக் கைது செய்தல், சோதனை, சுற்றிவளைப்பு, சித்திரவதை செய்தல், படையினருக்கு இழப்பு ஏற்பட்டதும் அதற்குப் பழி வாங்கும் விதத்தில் அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்தல், பொருளாதாரத் தடை விதித்தல் என்று முந்திய அரசின் காலத்தில் செய்த கெடுபிடிகளையே படையினர் புதிய அரசின் கீழும் மீட்டு வருகின்றனர்!

அரசாங்கம் மாறினாலும் படை ஒன்று தான். அதன் செயற்பாடுகளில் மாற்றம் இராது என்பதற்கு வடபகுதிக்கான தபால்களைக் கிழித்துச் சோதனை செய்யும் முடிவு ஒரு நல்ல உதாரணமாகும்.

தமிழர்களின் மனங்களை வெல்வதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசும் கூறியது; சந்திரிகா அரசும் கூறுகிறது. ஆனால் செயலளவில் அவர்களின் மனங்களை சிதைக்கும் காரியங்களிலேயே முந்திய அரசு ஈடுபட்டது; இன்றைய அரசும் ஈடுபடுகிறது. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வேறுபாடு தொடர்ச்சியாகவே அலைவரிசை மாறாமல் அசைந்து செல்கிறது.

# 9 ஆவது தொடர் உலர் உணவு கூப்பன் வந்து சேருவதில் தாமதம்

## தேங்கிக் கிடந்த 8 ஆவது கூப்பனை பயன்படுத்த முடிவு

வலிகாமம் மேற்கு, மே 31

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 8 ஆவது தொடர் உலர் உணவுக் கூப்பன் கடந்தமார்ச் மாதம் முடிவடைந்தது. ஏப்ரல் மாதம் தொடக்கம் 9 ஆவது தொடர் உலர் உணவு கூப்பன் வழங்கப்பட வேண்டும். ஆனால் கொழும்பில் இருந்து 9ஆவது தொடர் உலர் உணவுக் கூப்பன் வராமையினால் பாதிக்கப்படாமல் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இருந்த 8ஆவது தொடர் உலர் உணவுக் கூப்பன்களே 9ஆவது தொடருக்கு பதிலாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

8ஆவது தொடர் உலர் உணவு கூப்பனிலுள்ள புள்ளிகள் முறையே 22A — 25Aக்கும், 22B — 25Bக்கும், 23A — 26Aக்கும், 23B — 26Bக்கும், 24A — 27Aக்கும், 24B — 27Bக்கும் 9 ஆவது தொடர் உலர் உணவு கூப்பன் புள்ளிகளுக்கு செல்லுபடியாகும் என்று புனர்வாழ்வுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

பிரதேச செயலர்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த இடம்பெயர்ந்த கூப்பன் பத்திரங்களை மக்களுக்கு விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது பிரதேச செயலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [இ-157]

## பெந்தேகொஸ்து செபவிழா

மருதனாமடம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம பெந்தேகொஸ்து செபவிழா நாளை 1ஆம் திகதி முதல் 3ஆம் திகதிவரை தினமும் காலை 7மணிமுதல் நடைபெறும்.

## கட்டாக்காலி நாய் ஒழிப்பு

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் இப்பிரிவைச் சேர்ந்த சங்கானை, அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பொது சுகாதார பரிசோதகர்கள் பகுதிகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன.

இப் பிரிவில் ஏனைய பகுதிகளிலும் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட விருப்பதாக மானிப்பாய் பதில் சுகாதார வைத்திய அதிகாரியும், தலைமை சுகாதார பரிசோதகருமான திரு. து. மகாதேவா தெரிவித்தார். (க-135)

## உணவகங்களில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

உணவகங்களில் உணவை விநியோகிக்கும்போது சுகாதாரத்தைப் பேணும்வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

உணவகங்களின் உரிமையாளர்களைக் கோரும் மேற்கண்ட தீர்மானம் யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் இக்குழுவின் கூட்டத்தில் இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

உணவகங்களில் குறிப்பாக பலகார வகைகள், சிற்றுண்டிகள் பரிமாறப்படுகின்ற போது கேட்கப்படுவதற்கு அதிகமாக அவை வழங்கப்படுவதுடன் உண்ட பின்னரும் அவைகள் மேசையில் இருப்பதனால் இலையான், கொசு போன்ற கிருமிகள் அவற்றை அசுத்தப்படுத்த வாய்ப்பு ஏற்படுகின்றது.

அத்துடன் உணவருந்துபவர் தோல்வியாதிகளினால் பாதிக்கப்பட்டு இருந்தால் — அல்லது அவர்களின் கைகள் சுத்தமில்லாமல் இருந்தால் — அவர்கள் தொடும்போது அவ்வுணவுகளும் அசுத்தம் அடைகின்றன. இதே உணவுப் பொருள்கள் மீண்டும் உணவு உண்ண வருபவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

உணவகங்களில் இம்முறையில் உணவு பரிமாறுவது சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்துவதுடன், உணவு உண்பவர்களுக்கு தொற்று வியாதிகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது.

இதனால் இம்முறையினை தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது [இ-3]

## மரவேலை வகுப்புகள்

யாழ் கல்வித் திணைக்கள வலயம்2இன் மரவேலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக்கல்லூரியில் நடைபெறும். (க-155)

## இன்று

துணவி அ. மி. த க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி. ப. 1-30 மணிக்கு அதிபர் திரு. கா. சிவநேசன் தலைமையில் நடைபெறும்.

சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், வலிகாமக் கோட்ட கலை பண்பாட்டுக் கழகப் பிரதிநிதி திரு. இ. பொழிலர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். [க-30-90]

## திறந்த பல்கலை, கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், மே 31

கடந்த ஒரு மாதமாக தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமையில் இருந்து நடைபெறும் எனக் கொழும்புத் தலைமையகம் கச்சேரிக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளது எனவும் —

ஆகவே சகல மாணவர்களையும் 3ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் கூடுமாறும் பிராந்திய இயக்குநர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். [க]

## இலக்கிய அரங்கம்

யாழ்ப்பாணம் மே 31

நல்லைத் தமிழ்ச் சங்கம் வழங்கும் இலக்கிய அரங்கம் - 09 எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறும்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் பற்றிய கவியரங்கமும் பட்டிமன்றமும் இந்த இலக்கிய அரங்கில் இடம்பெறும். [க]

# உலக சூழல் தினம்

ஜூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள 'உலக சூழல் தினம்' தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் செய்தி குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

இன்று உலகளாவிய ரீதியில் மிகவும் ஒரு அபாயகரமான அச்சுறுத்தல் பிரச்சினையாக சூழல் மாசடைதல் உருவாகியுள்ளது. பாரிய அளவிலான தாக்கத்தை சூழல் மாசடைதலினால் பல உலக நாடுகள் சந்தித்துள்ளன. இச் சூழல் பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு பல நாடுகள் தமது பெருமளவு நிதியினையும், வளத்தினையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. சூழலியல் சீர்கேட்டினால் பாதிக்கப்பட்ட நாடுகள் இதற்கு பிராயச்சித்தம் செய்யும் முகமாகவும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் "உலக சூழல் தினம்" என்ற நாளை பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தை ஒவ்வொரு வருடமும், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் எச்சரிக்கையான, நாளாகவும் நினைவு கூரப்படுகின்றது. எனவே தமிழீழ மண்ணிலும், சூழல் மாசடைவதால் பெருமளவு நிதியினையும், வளத்தையும் நாம் இழக்காது எமது தமிழீழ நாட்டை முற்கூட்டியே சூழல் அழிவில் இருந்து பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

சூழலைப் பேணும் நன்நோக்கினை பிரகடனப்படுத்தி நிற்கும் நாளாகிய யூன் 5ஆம் நாளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளில் தமிழீழ மக்களாகிய நாம் அனைவரும், சூழல் தொடர்பான விழிப்புணர்வில் ஈடுபடுவதுடன், பாடசாலைகளிலும் — தனியார் நிறுவனங்களிலும், கரும பீடங்களிலும், பொது அமைப்புக்களிலும் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு எமது சூழலை பாதுகாப்பதற்கு எதை எதை செய்யலாமோ அவற்றை எல்லாம் இந்நாளிலே செய்து நலமான சூழலைவருங்காலச் சந்ததிக்கு ஒப்படைப்போம். [இ-5]

## ஆலயங்களில்

சங்கானை வெல்லிக் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும்.

தினசரி பிற்பகல் 4-00 மணிக்கு ஆலயப்பங்குத் தந்தை திரு சி. யி. ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் திருப்பலியும், ஆராதனையும் இடம் பெறும்.

ஜூன் மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-00 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெறும். (க-30)

★ ★ ★

கந்தரோடை ஸ்ரீ அருணானந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

ஜூன் மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க- 152)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி திருக்கடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும்.

உற்சவதினங்களில்வ. குமாரசுவாமி "சிவபராக்கிரமம்" என்னும் பொருள் பற்றி தினமும் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க-89)

★ ★ ★

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்

11ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் பகல் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலங்களில் திரு. க. கமலநாதனின் விசேட சொற்பொழிவும் இடம்பெறும். (க-152)

★ ★ ★

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய வருடாந்த கொண்டாட்டங்கள் இன்று புதன்கிழமை காலை நடைபெறும்.

காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியை அடுத்து திருச்சொருப பவனி நடைபெறுமென பங்குத் தந்தை வண. குணசீலன் அடிகள் தெரிவித்தார். [க-51]

★ ★ ★

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்ற உற்சவம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெறவுள்ளது. 12ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும். (க-28)

★ ★ ★

அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் புதிதாக வடிக்கப்பட்ட பஞ்சமுக விநாயகருக்கு நூதன மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் இரண்டாம் திகதி பகல் 11-00 மணிக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு. வை. விருத்தகிரீசக் குருக்கள் தலைமையில் ஈழத்தின் பிரபல குருமார்கள் இக் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தவுள்ளனர்.

பன்னிரண்டு நாள் மண்டலாபிஷேகமும் தொடர்ந்து சகஸ்ரநாம சத [1008] சங்காபிஷேகமும் நடைபெறும். (அ)

# தமிழருக்கு எல்லாம் தருவோம் எனக்கூறி எதையுமே வழங்காத ரத்வத்த குடும்பம்

"எந்தவொரு புவியியல் பிரதேசத்தையும் நாங்கள் விட்டுக் கொடுக்கவோ, கொடுத்து விடவோ இல்லை; பூநகரி முகாமை 600 மீற்றர் பின்னால் நகர்த்தியதைத் தவிர நாங்கள் எதுவும் கொடுத்து விடவில்லை. தற்போது மீண்டும் அதனை வழமைக்கு கொண்டு வந்து விட்டோம்"

மே 12 ஆம் திகதி பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார். நாங்கள் எதுவும் கொடுத்து விடவில்லை என சிங்கள மக்களுக்கு அவர் ஆறுதல் கூறியதன் மூலம் "எதுவும் கொடுத்து விடவில்லை. கொடுத்துவிடவும் மாட்டோம்" என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டார்.

நாங்கள் யார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் என உறுதியாக சொல்லி வைத்துவிட்டார்.

இலங்கையில் பேரினவாத அரசியல் தலைதூக்கிய பின் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்த சகலரும் பேரினவாத அரசாங்கத்தின் ஏக பிரதிநிதிகளாகவே தங்களை இதுவரை காட்டி வந்திருக்கிறார்கள்

குறிப்பாக 1977 களுக்குப் பின் ஒரு அத்துலத்முதலி... ஒரு ரஞ்சன் விஜேரத்ன அந்த வரிசையில் இன்று அனுருத்த ரத்வத்த.

அனுருத்த ரத்வத்த கடந்த மார்ச் மாத இறுதியில் கீழ் வருமாறு உரையாற்றியிருந்தார்.

"யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடைவதே அரசின் உறுதியான நோக்கம். அதற்காக எனது உடையைக் கழற்றி எறிந்துவிட்டு போர்ச் சீருடையை அணியவும் நான் தயார். நாட்டின் பிரதான இனத்தின் உரிமையை பாதுகாக்க நாங்கள் எல்லோரும் கை கோர்ப்போம்."

அனுருத்த சந்திரிகாவின் மாமனார்

அனுருத்தரத்வத்த இதற்கு முன் இராணுவத்தில் கடமை புரிந்தவர். கேர்ணல் பதவி வரை உயர்தர பதவி வகித்தவர்.

## அத்துலத்முதலி, ரஞ்சன் விஜேரத்ன வரிசையில் அனுருத்த ரத்வத்த

சிறிமா பண்டாரநாயக்காவின் ரத்வத்த பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் சிறிமா பண்டாரநாயக்காவின் தம்பி, சந்திரிகாவின் மாமனார்.

தமிழ் மக்களுக்கு எல்லாம் தருவோம் எனக்கூறி எதையுமே தராத பிழைப்புவாத அரசியலில் ரத்வத்த பரம்பரைக்கு நிரந்தர இடமுண்டு.

பண்டாரநாயக்க— செல்வநாயகம், சிறிமா — சாஸ்திரி, சந்திரிகா— பிரபாகரன் ஒப்பந்தங்கள் என்று அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அனுருத்த அன்று பேசியது

1989ஆம் ஆண்டு ஜே. வி. பி. இயக்கத்தை அடக்குவது என்ற பேரில் பெரும் அரசியல் படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம்—

அப்போது பதவியில் இருந்த ஐ. தே. க. அரசு புலிகளுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்த போது—

1989 டிசம்பர் 4ஆம் திகதி அனுருத்த ரத்வத்த எதிர்க்கட்சி வரிசையில் இருந்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை வருமாறு.

தலைவர் அவர்களே... 1990ஆம் ஆண்டுக்கான இவ்வரவு செலவு திட்டத்திலும் 5.6வீதம் பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார சூழ்நிலையில் இந்தளவு பாரியநிதி ஒதுக்கீட்டை பாதுகாப்புக்காக ஒதுக்குவதானது நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பாதிப்பாக அமையும் என கூற முடியும்.

ஆனால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை காரணமாக அந்தளவு நிதியை ஒதுக்காமலிருக்க முடியாது என்றும் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் சொல்லுகிறது.

நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளுக்கான தீர்வை யுத்தத்தின் மூலம் தான் அடையவேண்டுமா என எங்களுக்கு கேள்விஎழுப்ப வேண்டியுள்ளது.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளின் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு அப்பிரச்சினைகளுக்கான மூலகாரணங்களைத்தேடி அக்காரணங்களுக்கான அரசியல் ரீதியிலான பொருளாதார சமூக முறைகளில் தீர்வு வழங்குவதைப் பற்றி ஏன் சிந்திக்கிறீர்கள் இல்லை என்ற கேள்வி எழும்பியுள்ளது.

இந் நாட்டின் பொருளாதார நிலைமை இந்தளவுபின் தங்கியிருக்கிற போதும் கூட இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கி யுத்தத்தின் மூலம் இப் பிரசினையைத் தீர்ப்பதென்பது சரிதானா என்பதை அரசு சிந்திக்க வேண்டும்...

இந்நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண முயலுங்கள். இப்போது ஒதுக்கப்பட்டுள்ள பாரிய நிதி ஒதுக்கீட்டை நாட்டில் இருக்கின்ற ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பாவியுங்கள். யுத்தத்தின் மூலம் தீர்வொன்றை பெற முடியாதென்பதை அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்...

தேசிய புலனாய்வுப் பிரிவு கடந்த ஏழு வருட காலமாக சரியாக இயங்கியதாகத் தெரியவில்லை அந்நிறுவனத்திற்கும் இம்முறை இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கியிருப்பது தேவைதானா?...

நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலை எனக்கூறி உடனடியாக மூன்று வாரங்கள் அல்லது ஒரு மாத பயிற்சியை மாத்திரம் வழங்கி துப்பாக்கியையும் கையில் கொடுத்து பெருமளவு அதிகாரங்களையும் [illegible] வோரால் சிலவேளை விரும் [illegible]

பெற வழியுண்டு.

தெற்கில் பல பிரச்சினைகள் தோன்றின. தாங்கள் கூறுவது போல அப்பிரச்சினை கூடிய விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்பதை நாங்களும் விரும்புகின்றோம். ஆனால் அப்பிரச்சினைகளுக்கு யுத்தத்தீர்வு. தீர்வு ஆகாது. அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் தீர்க்கமுடியாவிட்டால் எதிர்காலத்தில் நாங்கள் இன்னும் பெரிய பெரிய விளைவுகளை யுத்தம் மூலம் சந்திக்கவேண்டியேற்படும்.

'பிரா', 'கொலகொட்டி' 'களுகொட்டி', 'களுபளல்லு', என்கின்ற பெயர்களில் பல ஆயுதக்குழுக்கள் இயங்கி வந்துள்ளபோதும் அவை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமற்ற ஆயுதக்குழுக்கள்.

இவ்விடயத்தை பாதுகாப்பு பிரதி அமைச்சரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அப்படியிருக்கும் போது அவற்றை இல்லாது செய்வதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

ரஞ்சன் விஜேரத்ன: நீங்கள் தான் அவ்வாறான குழுக்கள் இருப்பதாகக் கூறிக் கொள்கிறீர்கள் அப்படி இருப்பதாக நானென்றால் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி இருந்தால் அதனை இல்லாமல் செய்வோம்.

அனுருத்த ரத்வத்த: கௌரவ தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களை தெளிவாக உணர்ந்து யதார்த்தத்தை - உண்மைநிலையை கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் மீண்டும் அவை நடக்காதிருப்பதற்கான வேலைத்திட்டத்தை அமைப்பது அத்தியாவசியமானது. அவசியமான நேரத்தில் யுத்தத்தின் மூலமல்லாது வேறு முறையில் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று இப்படியான பொருளாதார நிலைமைகளுக்குள்ளும் - இந்நடவடிக்கைகளுக்கு பெரிய தொகை- நாற்றுக்கு 56 வீதம் பணத்தை ஒதுக்க வேண்டியேற்பட்டிருக்காது. சரியான அரசியல் தீர்வொன்றை மேற்கொண்டால் மட்டுமே இப் பிரச்சினைக்கு முடிவு காணலாம் எனக் கூறி விடைபெறுகிறேன்.

இப்படி அனுருத்தரத்வத்த கூறினார். இந்த அனுருத்த ரத்வத்தவின் அன்றைய முகம் மேலே காட்டப்பட்டுள்ளது இன்றையமுகத்தைஇன்றுநாம் கண்டுகொண்டிருக்கின்றோம்.

இதே நடவடிக்கைகளை ஐ.தே.க. செய்தபோது இனவாதமென்றும், யுத்த வெறியர்கள் என்றும் மனித உரிமை மீறல் என்றும் பொ. ஐ. மு பிரச்சாரம் செய்தது. - கண்டனங்களை எழுப்பியது. இன்று மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை என்னவென்பதோ தெரியவில்லை!

1989 இல் ஆற்றிய உரையில் ஜே.வி.பியைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தெற்கில் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு தீர்வு ஆயுதத்திரவல்ல என்று கூறி இருந்தார்.

ஆனால் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அனுருத்த ஜே வி. பி. தனது பழைய நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் அதற்கும் என்னிடம் மருந்திருக்கிறது' எனக் கூறியிருப்பது அனுருத்த ரத்வத்தவின் பிழைப்புவாத அரசியலை அப்படியே வெளிக்காட்டுவதாக இருக்கிறது. அவர் கூறிய மருந்து என்ன என்பது தெரியாத தொன்றல்ல.

கடந்த மே தினத்தன்று கொழும்பில் நடத்தப்பட்ட ஜே.வி.பி. கூட்டத்தில் உரையாற்றிய ஒருவரது உரை ஞாபகத்திற்கு வருகிறது. அவர் சொன்னார். "உங்களுக்கெல்லாம் ஒன்றைக் கூறலாம் உங்கள் முகங்களை நீங்கள் கண்ணாடியில் பார்த்ததுண்டா? அதிற் தெரியும் அவலட்சணங்களை பார்த்ததுண்டா? இவற்றை உங்களிடமே நீங்கள் கேளுங்கள். நிச்சயம் உங்களுக்கு அவை உறைக்கப் போவதில்லை என்பதை நாங்கள் அறிவோம். ஏனென்றால், நீங்கள் யார் என்பதை புதிதாக சொல்லித் தெரிய வேண்டியதில்லையே.'

நன்றி சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கான அரசின் யோசனைகள் புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்!

## சிங்கள வார இதழ் தகவல்

கொழும்பு, மே 31

இனப்பிரச்சினை தொடர்பான தனது தீர்வுதிட்டத்தை (Peace Package) விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்குக் கிடைக்கக் கூடியதாக ஸ்ரீலங்கா அரசுத் தலைவர் அனுப்பி வைத்திருக்கிறாராம்.

மிகவும் நம்பிக்கையான வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ரஸ்மிய' என்ற சிங்கள வார இதழ் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

தனது தீர்வுத் திட்டத்தை அரசு எந்தவழி மூலம் அனுப்பியது என்பதனை அறிய முடியவில்லை.

திரு. பிரபாகரனின் பதிலை இவ்வாரத்தில் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்தத் தீர்வு யோசனை புலிகளுக்கு அனுப்பப்பட்டதன் மூலம், இப்பிரச்சினைக்கு தீர்வு யோசனை எதனையும் அரசு முன் வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முடிவுக்கு வருகின்றது.

ஸ்ரீலங்காப் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள வெளிநாடுகளுக்கு அறிவித்த பின்னரே, இந்தத் தீர்வு யோசனையை விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பி வைத்தது.

கிடைத்துள்ள தகவல்களின்படி —

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு, சமஷ்டி முறைத் தீர்வு, காணி தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு சமஷ்டி அமைப்புக்கு அதிகாரம் வழங்குதல் ஆகிய முக்கிய விடயங்கள் அரசின் யோசனைத் திட்டத்தில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னணி அரசியல் கட்சிகள் இத்தீர்வை ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வகையான தீர்வு முன்வைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

— இவ்வாறு 'ரஸ்மிய' பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-10)

## செப்ரிசீமியா; 1 வயதுச்சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், மே 31

காய்ச்சல் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு வயதுச் சிறுவன் நேற்றுக் காலை அங்கு மரணமானார்.

செப்ரிசீமியா நோய் தாக்கத்தினாலேயே இச்சிறுவனின் மரணம் ஏற்பட்டதாக வைத்தியசாலை அறிக்கை மூலம் தெரியவருகிறது.

சரசாலை தெற்கைச்சேர்ந்த பிரபாகரன் மகிந்தன் என்ற பாலகனே மரணமானவர் ஆவார்.

செப்ரிசீமியா தாக்கத்தினால் யாழ். ஆஸ்பத்திரியில் இம்மாதம் மட்டும் 7 பேர் வரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-13)

## மெய்வல்லுநர் போட்டி

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கனிஷ்ட பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. மு. நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக இளைப்பாறிய முன்னாள் அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார். (ஒ-31)

★ ★ ★

வடமராட்சி, மே 31

மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் வித்தியாலய விளையாட்டரங்கில் அதிபர் திரு. அ. சா. அரியகுமார் தலைமையில் நடைபெறும். (ஒ-173)

## மாஹோவில் மண்எண்ணெய்

வடமராட்சி, மே 31

மாஹோ கப்பலில் வந்து சேர்ந்த மண்எண்ணெய் பரல்கள் நேற்று இறக்கப்பட்டன.

சுமார் 6 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெயுடன் இக்கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து சேர்ந்தது. [ஒ-173]

# தரவைக்குளம் முகாம் தகர்ப்பில் களப்பலியான புலி வீரர்கள்

யாழ்ப்பாணம், மே 31

மட்டக்களப்பின் தரவைக்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின்போது விசாலகன் சிறப்புப் படையணியைச் சேர்ந்த சிறப்பு பொறுப்பாளர் லெப். கேணல் வினோதன் (தம்பிப்பிள்ளை பதுமநபதன் - மட்டக்களப்பு) உட்பட 17 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் விபரம் வருமாறு:-

கப்டன் ராஜபாலன் அல்லது குகதீஸ் (பொன்னம்பலம் பாபு - அம்பாறை)

லெப். அலோகிதன் (தம்பிஐயா வாமதேவன் - அம்பாறை)

லெப் திலகராஜ் [பாக்கியராஜா சுபேந்திரன் - மட்டக்களப்பு)

2 ஆம் லெப் சுவேந்திரன் [சாமித்தம்பி வீரக்குட்டி - மட்டக்களப்பு].

2 ஆம் லெப் ஈழக்குமரன் அல்லது இளங்குமரன் (தங்கராசா சின்னராசா - மட்டக்களப்பு].

2 ஆம் லெப் கலாநிதி (அழகையா ரவீந்திரன் - மட்டக்களப்பு].

2 ஆம் லெப் விஜிதரன் [கிருஷ்ணபிள்ளை வேதாரலிங்கம் - மட்டக்களப்பு).

2 ஆம் லெப் சிவானந்தன் [செல்லையா தேவராஜன். மட்டக்களப்பு),

2 ஆம் லெ சஞ்சீவி (வேலுச்சாமி ஜெயருபன் - மட்டக்களப்பு),

2 ஆம் லெப். சத்தியவான் [வீரையா சிவகுமார் - மட்டக்களப்பு).

2 ஆம் லெப் மண்மோகன் [கதிர்காமப்போடி பரிரதன் - மட்டக்களப்பு],

2 ஆம் லெப். நாதகோபால் [கிருஷ்ணபிள்ளை விஷ்ணுவர்த்தன் - அம்பாறை],

2 ஆம் லெப். சர்வமாறன் [நாகாண்டபோடி கோவேந்தராஜா - மட்டக்களப்பு].

2 ஆம் லெப். சிவரூபன் அல்லது ரட்ணம் [சின்னத்தம்பி சிவலிங்கம் - மட்டக்களப்பு] ஆகியோரும் —

தாக்குதலில் விழுப்புண் அடைந்து பின் கடந்த திங்கட்கிழமை வீரவேங்கை அழகராஜ் [மோகன சுந்தரம் ரஜனிகாந் மட்டக்களப்பு]

வீரவேங்கை கலைநேசன் அல்லது விக்வம் முத்ததம்பி செல்வரட்ணம் மட்டக்களப்பு] ஆகியோரும் வீரச்சாவடைந்தனர்.

தரவைக்குளம் முகாம் தகர்ப்பில் 43க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததும் ஏராளமான ஆயுதங்களை புலிகள் கைப்பற்றி இருந்ததும் தெரிந்தவையே.

## கப்பலில் கொழும்பு செல்லும் நோயாளரின் பதிவுகள் இனி வெள்ளிக்கிழமைகளில்

விசேட சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்களைப் பதிவு செய்யும் வேலைகள் யாழ். ஆஸ்பத்திரியில் இனி மேல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நடைபெறும். இவ்வேலை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பு செல்லவிருந்த "சிடாஸெர்" கப்பல் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நோயாளர்களுடன் புறப்படும்.

இக்கப்பலில் செல்லவிருக்கும் நோயாளர்களும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு தண்ணிருடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6 30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-4)

## கலைத்திறன் போட்டி

யாழ்ப்பாணம், மே 31

"யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 1க்கான தமிழ் மொழி - கலைத்திறன் வலய மட்டப் போட்டிகள் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க)


## தவறிவிட்டது!

பல்வேறு முகவரிகள் அடங்கிய எனது டயறி கடந்த திங்கட்கிழமை காலையில் குளப்பிட்டிச் சந்திக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து என்னிடம் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் என். சிவராஜன்
மருத்துவ பீடம்.
யாழ் பல்கலைக் கழகம்.

(36863)


## எய்ட்ஸ் நோயாளிகள் இலங்கையில் 155 பேர்!

யாழ்ப்பாணம், மே 31

இலங்கையில் 155 எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 93 பேர் ஆண்கள்.

இந்த எய்ட்ஸ் நோயாளிகளில் 9 பேர் ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்கள்.

எய்ட்ஸுக்கு இலக்கான 155 பேரில் 14 பேர் பணிப்பெண்களாவர்.

கண்டியில் நடைபெற்ற — எய்ட்ஸ் சம்பந்தமான — கருத்தரங்கு ஒன்றில் இந்தப் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டன.

இதற்கிடையில் —

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் புதிதாக எய்ட்ஸ் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மெக்ஸிகோ நாட்டின் கப்பல் ஒன்றில் 4 வருடங்களாக கடமையாற்றி விட்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ள இவருக்கு — எச். ஐ. வி. பொசிற்றிவ் நிலையில் - எய்ட்ஸ் வைரசு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இவர் கடந்த 3 மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார். சரும நோய் சம்பந்தமான சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற இவரை, எய்ட்ஸ் பரிசோதனைக்கு உட்படுத்திய வேளையில் அவருக்கு நோய் தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு முதல் இதுவரை 4 எய்ட்ஸ் நோயாளிகள் இனங்காணப் பட்டனர். அவர்கள் பின் உயிரிழந்து விட்டனர்.

தற்போது எய்ட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டவர் சுகாதாரப் பிரிவின் கண்காணிப்பில் தனிமைப் படுத்தி வைக்கப்பட்டிருப்பதுடன், ஏனையோருக்கு இந்நோய் தொற்றாமல் பாதுகாப்பதற்கு வேண்டிய அறிவுறுத்தல்களும் அவருக்கு வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. [உ-4]

## யாழ். ஆஸ்பத்திரியில் எய்ட்ஸ் இரத்தசோதனை!

### இரகசியம் பேணப்படும் என உறுதி

யாழ்ப்பாணம், மே 31

தமிழ்நாட்டில் இருந்து வரும் அகதிகள் உட்பட வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்புவோருக்கான இலவச 'எய்ட்ஸ்' இரத்தப் பரிசோதனை யாழ் போதனா வைத்தியசாலையின் 33 ஆம் இலக்க அறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இங்கு நடைபெறும் 'எய்ட்ஸ்' இரத்தப் பரிசோதனைக்கு வருபவர்களது ஆய்வு மற்றும் அவர்களது பெயர் விவரங்களின் இரகசியம் பேணப்படுவதாகவும் —

எனவே எவரும் அச்சமின்றி வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் எனவும் —

யாழ் போதனா வைத்தியசாலையின் எய்ட்ஸ் நோய் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ-4)

## திருப்பி அழைப்பு

கொழும்பு, மே 31

மட்டக்களப்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாட்டவர்களை உடனடியாக கொழும்பு திரும்புமாறு வெளிநாட்டுத் தூதரகங்கள் அழைத்துள்ளன.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-4)

## நள்ளிரவில...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறை, மண்டைதீவு இராணுவ முகாம்களில் இருந்தும் அராலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும பதற்றத்துடன் இரவைக் கழித்தனர். (ஒ-15)

## காடுகளில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திலுள்ள இராணுவத்தினரை மாவட்டத்திலுள்ள பெரிய முகாம்களுக்கு ... தெரிவித்தது. (உ-4)

## அரசியல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைக் கைவிட வேண்டாம் என ஸ்ரீலங்கா அரசை அவர் வலியுறுத்தினார் என்றும் அறியவருகின்றது.

"அரசியல் தீர்வு ஒன்றே சாத்தியமானது; முக்கியமானது; இந்த நெருக்கடியைத் தணிப்பதற்கு நம்பத் தகுந்த மாற்று நடவடிக்கையும் இதுவே" — என்று அமெரிக்க அமைச்சர் வலியுறுத்தினார்.

சமாதான முயற்சி செத்து விட்டது என்று ஜனாதிபதி குமாரதுங்க வெளியிட்ட அறிவிப்புக் குறித்து கிளின்ரன் நிர்வாகம் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டதாகவும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளுடனான போரில் ஈடுபடுவதற்கு ஆயுத உதவி வழங்கும்படி அமெரிக்க அரசிடம் ஸ்ரீலங்கா அரசு கோரிக்கை விடுத்தது என்பதும்—

உயிரிழப்புகளை ஏற்படுத்தாத இராணுவ வாகனங்கள், தளபாடங்கள் போன்றவற்றையே வழங்க முடியும் என அமெரிக்கத்தரப்பு தெரிவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ)

## கிழக்கில...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிலும் உள்ள படைகளின் ஒரு பகுதியை கிழக்குக்கு அனுப்ப வேண்டிய கட்டாயத்தை அரசுக்கு ஏற்படுத்தக் கூடும் எனக் கருதப்படுகின்றது

அத்தகைய நிலை ஏற்பட்டால்

அரசியல் ஸ்திரமற்ற தற்போதைய நிலையில் தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய கொந்தளிப்பு, தீவிரவாதிகளின் தாக்குதல் மிரட்டல் ஆகியவற்றுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையை அரசுக்கு ஏற்படுத்துவதோடு —

வடக்கு படை முகாம்கள் புலிகளின் கைகளில் விழுவதற்கும் அதனால் வாய்ப்புண்டாகும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது

இதனை எதிர்பார்த்தே புலிகள் தமது வியூகத்தை வகுத்து கிழக்கில் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன

இத்தகைய நிலைமையைச் சமாளிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அரசு வெளியிட வேண்டும் என்றும் —

அதனைத் தமிழ்க் கட்சிகள் இணைந்து ஏற்றுக் கொண்டால், தற்போதைய போராட்டத்தில் அரசபடைகளுடன் இணைந்து போராட தனது குழு தயாராக இருப்பதாகவும் —

... டி. பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருக்கிறார். (உ-6)


வாழ்க வளமுடன்

★ மீண்டும் புதிய உதயம்

அம்பிகாபதி அழகுமாடம்

எதிர்வரும்

02 - 06 - 95 வெள்ளிக்கிழமை

மங்களகரமான ஆரம்பம்

நவீன சந்தையில்

அம்பிகாபதி அழகுமாடம்

மகளிர் நாட்களுக்குரிய அழகுசாதன, அன்பளிப்பு. அலங்கார பொருள்கள், ரேடியோக்கள் கைக்கடிகாரங்கள், மேசை, சுவர் மணிக்கூடுகள். கோல்ட் கவறிங் நகைகள் எவர்சில்வர் பொருள்களுக்கு

அம்பிகாபதி அழகுமாடம்

முகவரி அதே முகவரிதான்!

9 ஏ. சிறுப்பு அங்காடி யாழ் நகர்

விளம்பரஆக்கம்

மணிக்குரல் மேஜர் ஷண்

✶ சுவர்ச்சிகரமான அழகிய அச்சுவேலைகளுக்கும்

✶ தரமான வரலாற்று, இலக்கிய, இலக்கண நூல்களை அச்சிடுதற்கும்

✶ நகை மாடங்களின் உரிமையாளர்களினதும் மற்றும் வர்த்தகப் பெருமக்களின் அச்சிடுந் தேவைகளை நிறைவேற்றுதற்கும்

தகுதி வாய்ந்த முன்னணிப் பதிப்பகம்

★ அபிநயா ★

65/1, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மக்கள் சேவைக்காகத் தனது வளர்ச்சிப் பாதையில் ........

இரண்டாவது ஆண்டில்

காலடி எடுத்து வைக்கும் ஈழத்தின் முன்னணிப் பதிப்பகம் சகல விதமான அச்சிடும் வேலைகளுக்கும் நாட வேண்டிய சிறந்த நிறுவனம்:

"அபிநயா பதிப்பகம்"

மூதற்றமான அச்சுவேலைகளுக்குச் சான்று பகரும் 'அபிநயா பதிப்பக'

வெளியீடுகள்:

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பழங்கிணற்றடிப் பிள்ளையார் 'திருவூஞ்சலும் தோத்திரங்களும்'
ச தங்கமாமயிலோன்

இணுவில் ஸ்ரீ கல்யாண வேலவர் திருவூஞ்சல
ஓய்வுற்றதமிழாசிரியர் அ. க. வைத்தியலிங்கபிள்ளை

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு
சிவநெறிச் செம்மல் வை அருணாசலவிநாயகமூர்த்தி

யாழமுதன் கவிதைகள் - கு. கயிலாயபதி

அம்மாவே - பாவலவன் சத்தியசீலன்

[36864]


## மரண அறிவித்தல்கள்

### செல்வி சௌந்தரராஜா விஜிதா

செல்வி சௌந்தரராஜா விஜிதா 29 - 05 - 95 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் சௌந்தரராஜா - உருத்திராதேவியின் சிரேஷ்ட அன்புப் புத்திரியும், அனுஷா, தனுஷா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, சோதிப்பிள்ளை, குமாரசாமி மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை [04-06-95] நடைபெறும்.

தகவல்:
குடும்ப உறவினர்
[அரியாலை]

கு. பாக்கியநாதன்
9, அரசடி ஒழுங்கை,
அரியாலை

[36871]

### திருமதி சோதி கனகரெட்ணம்

திருமதி சோதி கனகரெட்ணம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற V. R. கனகரெட்ணத்தின் [ஸ்ரேசன் மாஸ்ரர்] அன்பு மனைவியும், சத்தியவதி, சித்திராவதி [தொலைத் தொடர்புத் திணைக்களம்], சற்குமார் [கனடா], சுகிர்தவதி [லண்டன்], யோகவதி [இந்தியா] பத்மாவதி [திருகோணமலை] ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவரெட்ணம், நவரெட்ணம் [நீர்ப்பாசன இலாகா], றொகான் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இவரது நல்லடக்க ஆராதனை இன்று [புதன்கிழமை] பி. ப 4-00 மணியளவில் 37/1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பரிபேதுருவானவர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
M. N. நவரெட்ணம்
[மருமகன்]

[36873]

### இராமலிங்கம் கதிர்காமு

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இராமலிங்கம் கதிர்காமு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் குணேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெரியதம்பி- அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், திருக்கேதீஸ்வரி, கமலேஸ்வரி [சுவிஸ்], ஜெகதீஸ்வரி, சண்முகராசா [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தகப்பனும், கணேசராசா (கொழும்பு), சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஜனின் (சுவிஸ்) அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா ஐயம்பிள்ளை, யோகம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற முன்னாள் இ போ. சபை நடத்துநர் விநாயகமூர்த்தி, முத்தம்மா, காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் நாகேசு, காலஞ்சென்ற தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர் சுப்பிரமணியம் [தம்பிமுத்து] ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [31-05-95] பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
குணேஸ்வரி
(மனைவி)

பொன்னம்பலம் வீதி,
கோண்டாவில்.

(36874)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31 - 05 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org